# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளப் பங்குச் சபையின் 9வது கூட்டம் ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் 18-10-2009 அன்று மாலை 6.30 மணியளவில் பங்குத்தந்தையின் செபத்துடன் ஆரம்பமானது. அன்றைய கூட்டத்திற்கு திரு. நெல்சன் ஆரோக்கியநாதர், திரு. விஜயக்குமார் அகஸ்ரின், திரு. ஜஸ்ரின் ஜீவானந்தம் ஆகியோர் சமூகம் தரவில்லை. செயலாளர் சமூகம் தராமையினால், கடந்த மாத கூட்ட அறிக்கை உப செயலாளர் திரு. அமிர்தநாதர் வாசித்தார். அதில் சில திருத்தங்கள் செய்யப்பட்டபின், திரு. அல்பிரட் ஞானராஜா அவர்கள் முன்மொழிய, திரு. சூசைமாணிக்கம் அவர்களால் வழிமொழியப்பட்டு அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. திரு. விஜயகுமார் அகஸ்ரினுக்குப் பதிலாக திரு. வினிபிரட் திருமேனி கூட்டத்திற்குச் சமூகமளித்தது தவறென திரு. அல்பிரட் ஞானராஜா அவர்கள் எடுத்துக்கூற, அவ்விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. அப்படி யாராவது வருவதானால் பங்குத் தந்தையின் அனுமதி பெற்றிருக்கவேண்டும் எனவும் கூறப்பட்டது.

பங்குத்தந்தை விடுமுறையில் செல்லவிருப்பதால் பேச்சுப் போட்டிக்கான உரைகள் ஐப்பசி மாத இறுதிக்குள் கொடுக்கப்பட்டால், போட்டிகளை கார்த்திகை மாத இறுதியில் நடாத்தலாம் எனவும் கலந்துரையாடப்பட்டது. நடுவர்களைத் தெரிவு செய்வதில் பங்குச்சபை உறுப்பினர்களின் உதவி பங்குத் தந்தையால் கோரப்பட்ட பொழுது, அவர்கள் கத்தோலிக்கத்தைப் பற்றிய அறிவுள்ளவர்களாகவும், முன்பு நடுவர்களாகப் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்களாயும் இருப்பது நல்லது என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அதேசமயம் அவர்கள் மொன்றியலிலோ அல்லது வெளியிடங்களிலிருந்தோ தெரிவுசெய்யப்படலாம் எனவும் கூறப்பட்டது. போட்டிகளின் போது இரண்டு பிள்ளைகள் ஒரு இடத்திற்கு தெரிவு செய்யப்பட்டாலும், இருவருக்கும் பரிசுகள் வழங்கப்பட வேண்டும் என்றும், பங்கேற்கும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஒளிவிழாவை நடாத்துவதற்கான மண்டபத்தை தெரிவு செய்வதில் திரு. சார்ள்ஸ் பங்குத் தந்தைக்கு உதவ முன்வந்தார். 'சோவே' மண்டபத்திற்குரிய வாகனத்தரிப்பிடத்துக்கு மேலதிக பணம் செலுத்த வேண்டியிருப்பதால் அதை தவிர்த்து, வேறு இடம் தேடிக்கொண்டிருப்பதாகக் கூறப்பட்டது.

வருகின்ற ஆண்டுக்கான நாட்காட்டி அச்சிடுவது பற்றி பங்குத்தந்தை கூறுகையில், அவை இங்கு அச்சிடுவதைவிட இந்தியாவில் அச்சிட்டால் செலவைக் குறைக்கலாம் என்று கூறினார். நாட்காட்டி அட்டையில் எமது மறைத்தள வளர்ச்சியின் வரலாறு பற்றிய படங்களைப் போடலாம் என திரு. அலெக்ஸ் மார்க்கண்டு தெரிவித்தார்.

முதியவர்கள் சம்பந்தமான பொறுப்பு திருமதி கலிஸ்ரா தவராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமானவர்களிடம் கலந்துரையாடப்பட்ட பின் விளக்கம் தருவதாக அவர் அறிவித்தார்.

## ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 18-10-2009

பங்கில் நடைபெறும் திருவருட்சாதன நிகழ்வுகள், விழாக்கள், பூசைக்குப் பணிபுரிபவர்கள், வாசகங்கள் வாசிப்பவர்கள் போன்ற விபரங்களை ஒருங்கிணைத்து, மக்களுக்கு வழங்கும் பொறுப்பு திரு. யூலியன் அவர்களால் எடுக்கப்பட்டு அதற்க்குப் பொருத்தமானவர் ஒருவர் மூலமாகக் கையாளப்படும் எனக் கூறப்பட்டது. அதன்படி ஏற்கெனவே திருவிருந்து வேளையில் மக்களை ஒருங்குபடுத்தும் இளையவர்களைக் கொண்டு காணிக்கை சேகரிக்கப்பட்டு, அவற்றை ஒன்றாகச் சேர்த்தபின் ஒவ்வொரு திருப்பலிக்கும் ஒவ்வொரு குடும்பத்தை தெரிவுசெய்து, ஆலயத்தின் பின்புறமிருந்து காணிக்கையாகக் கொண்டு வருவது என்றும் தீர்மானிக்கப்பட்டு, அந்தக் குடும்பங்களைத் தெரிவுசெய்யும் பொறுப்பு திருமதி கொன்சி குணசீலன் அவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் திரு. யூலியன் அவர்களால் கூறப்பட்டது.

மேலும், திருவிருந்து, காணிக்கை வேளைகளில் உதவும் இளையவர்களை முன் வரிசையில் உள்ள ஆசனங்களில் அமரவைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. பங்குத் தந்தை விடுமுறையிலிருந்து திரும்பியதும் இவற்றை அமுல்படுத்தலாம் எனக்கூறப்பட்டது. கோவிலின் கீழ் மண்டபத்தில் அமைக்கப்பட இருக்கும் கணணி நிலையம், Internet வசதிகளுடன் இருப்பதால், அவை நன்கு கண்காணிக்கப்பட்டு, நமது சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் திரு. யூலியன் அவர்கள் கூறினார். இறுதியாக, திரு. வினிபிரட் திருமேனி அவர்களின் இறுதிச் செபத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.

அருட்.தந்தை அன்றூ தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்
செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்